ஆகவே அந்தக் குளத்திலே போட்டிங் விடுவதற்கு வசதியாக இருக்கும். அதே நேரத்திலே கொற்கையிலே பாண்டிய மன்னர்கள் காலத்திலே அமைக்கப்பட்டிருக்கிற விநாயகர் கோவிலில் 1981 ஆம் வருடம் அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அங்கே அரசு விழா ஒன்று அமைச்சர்களால் கொண்டாடப்பட்டது. அதற்கு சுற்றுலாத் துறை மூலமாக 5 ஆயிரம் ரூபாய் நிதி உதவி கூட வழங்கப்பட்டது. ஆகவே வருடா வருடம் கொற்கையிலே அந்த விநாயகர் கோவிலிலே விழா கொண்டாடுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டேனியல் ராஜ் அவர்களே, பிள்ளையார் கோவில் கொற்கையிலே 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக நிறுவப்பட்டதாகத் தாங்கள் கருதுகிறீர்களா ?

திரு. எஸ். டேனியல்ராஜ் : அதற்கான கல்வெட்டுகள் அந்தக் கோவிலிலே இருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பிள்ளையார் வந்ததே பல்லவர் காலத்திலேதான், பாண்டியர் காலத்திலே அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தான் வாதாபியிலிருந்து பிள்ளையார் வந்தார் என்பது வரலாறு. மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் டேனியல் ராஜ் தந்த தகவல்களை நான் குறித்துக் கொள்கிறேன். அந்தத் தொகுதியிலே நல்லதொரு விழாவினை ஏற்பாடு செய்ய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடலூர் பகுதியைச் சுற்றுலா மையமாக்கல்.

***3521—திரு. இ. புகழேந்தி :**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலூர் பகுதியை சுற்றுலா மையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, எந்த நகரையும் ''சுற்றுலா'' மையம் என்று இவ்வரசு அறிவிப்பதில்லை. ஆனால் மத்திய அரசின் உதவியுடன் கடலூர் தேவனாம்பட்டினம் கடற்கரையில் சுற்றுலா வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1990 மார்ச் 21

திரு. இ. **புகழேந்தி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நகரமாக உருவாகும் கடலூர், எழிலார்ந்த கடற்கரையைக் கொண்ட கடலூர், பெர்ரி சர்வீஸ் என்ற படகு துவக்கப்பட்டுள்ள கடலூர், சுற்றுலா மையமாக மைய அரசினுடைய திட்டக் கூறுகளோடு இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே விரைவாக கட்டுமானப் பணிகளை நடப்பாண்டிற்குள் துவக்குவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

10.05 மணி

மாண்புமிகு திரு. கே. பி. **கந்தசாமி** : அவைத் தலைவர் அவர்களே, அந்தத் தேவனாம்பட்டினத்தினுடைய கடற்கரை ஓரத்தில் சற்றொப்ப 25 இலட்சம் ரூபாய் செலவில் தங்கும் விடுதியொன்று கட்டுவதற்கு அனுமதி தரப்பட்டிருக்கின்றது. அதற்கான கால்கோள் விழா இந்த மாத இறுதிக்குள் நடைபெறும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. **எஸ். ஆர்.** இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாவட்டத்தினுடைய எல்லாத் தலைநகரங்களிலும் சுற்றுலா விடுதி அமைக்க வேண்டுமென்று பழைய தீர்மானம் ஒன்றிருக்கிறது. அந்த வகையில் கடலூரிலே அமைப்பதைப் போல, எல்லாத் தலை நகரங்களிலும் அமைக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிகிற அதே நேரத்தில் இன்றைக்கு உலக வன நாள், அந்த வகையில் மரம் நடுகின்ற பணியில் இன்றைக்கு அமைச்சரவர்கள் கொஞ்சம் தாமதமாக வந்து இருந்தாலும், எல்லா சுற்றுலா மையங்களிலும் மரம் நடுவதற்கு இன்றைக்கு ஒரு ஆணையிடுவாரா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. **கந்தசாமி** : தலைவர் அவர்களே, அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் சுற்றுலா விடுதிகள், ஓய்வு விடுதிகள் கட்டுவதற்குத் திட்டமிட்டுக் கொண்டு இருக்கின்றோம். எங்கெங்கே இன்னும் இல்லையோ— குறிப்பாக, புதுக்கோட்டை நகரிலே அப்படிப்பட்ட விடுதி இல்லை. அங்கேயும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம். தூத்துக்குடியிலே, அது போல நெல்லையிலே, வேலூரிலே, சேலத்திலே இப்படிப் பல மாவட்டத் தலைநகரங்களிலே அந்த விடுதியைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம். விடுதி மட்டுமல்ல ; சென்னை, கோவை, திருச்சி, மதுரை போன்ற முக்கியமான நகரங்களில், ''அம்யூஸ்மென்ட் பார்க்'' ஏறத்தாழ 5 கோடி, 10 கோடி செலவிலே, சிறுவர்களும், பெற்றோர்களும், இளைஞர்களும் அங்கே பொழுது போக்கிற்காக சென்று, நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதற்காக 'அம்யூஸ்மென்ட் பார்க்'' அங்கே அமைப்பதற்கும் ஏற்பாடு நடைபெற்று வருகின்றது. இன்றைக்கு உலகம் முழுவதிலும் வன நாள் கொண்டாடப்படுகிறது. இங்கே சுற்றுலாத் துறையின் மூலமாக மட்டுமல்ல, ஒவ்வொரு தனியார் நிறுவனங்

1990 மார்ச் 21]

களிலும், அனைத்துப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் கூட அப்படிப்பட்ட மரம் நடு விழாக்களை நடத்த வேண்டும் என்பது இந்த அரசினுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்.

(அ) இலங்கையிலிருந்து வந்து ஒரிசா மாநிலத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுவது குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல்வேறு தின இதழ்களில் இலங்கையிலிருந்து வருகை தந்திருக்கின்ற தமிழ் அகதிகள் ஒரிஸ்ஸாவிலே கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டு அவர்கள் அங்கே இருப்பது ஒரு பிரச்சினையாக ஆக்கப்பட்டு அதன் காரணமாக பாதிக்கப்பட்ட அந்தத் தமிழர்களை லாரிகளிலே ஏற்றி அவர்களை வெளியேற்றுகின்ற முயற்சி நடைபெறுவதாக இன்றைக்குப் பத்திரிகைகளில் செய்தி வந்து இருக்கிறது. இந்திய அரசாங்கத்தினுடைய துணையோடு இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்த கப்பலில் அங்கேயிருந்து அழைத்து வரப்பட்ட அந்தத் தமிழ் அகதிகள் என்ன காரணத்தாலோ ஒரிஸ்ஸாவிற்குப் போய் விட்டார்கள் : ஏன் போனார்கள் எதற்காகப் போனார்கள் எப்படி அனுப்பினார்கள் என்கின்ற விவாதத்தை எல்லாம் வேறு ஒரு நேரத்திலே, விவாதிக்கின்ற நேரத்திலே நான் பேசுகிறேன். ஆனால் ஒன்றை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புவது, பாதிக்கப்பட்ட தமிழர்கள், போராளிகளா, இல்லையா என்பதைவிட பாதிக்கப்பட்டு அகதிகளாக வாழ்வு தேடி வந்து கொண்டிருக்கின்ற அந்தத் தமிழர்களை, காப்பாற்றுவதை நம்முடைய கடமையாக நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில் ஒரிஸ்ஸாவிற்கு அனுப்பப்பட்டிருக்கின்ற அந்தத் தமிழர்களை தமிழ்ப் பகுதிகளிலே இங்கே தமிழகத்திலே அவர்களைக் குடியேற்றி அவர்களை வாழ வைக்கின்ற அளவிற்கு நீங்கள் முன்வரவேண்டுமென்று நான் பணிவோடு உங்களைக் கேட்டுக்கொள்வேன். அவர்கள் போராளிகள் அல்ல என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே தாய்மார்கள் இருக்கிறார்கள். குழந்தைகள் இருக்கிறார்கள். போராளிகள் இல்லை என்று வேறு, மத்திய அரசாங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, எப்படியோ கப்பலிலே அவர்களை